# <u>கீழக்கரை நகராட்சி</u>

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஆகஸ்ட் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 21.08.2018–ந் தேதி மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**<u>பொருள் : 1</u>**

கீழக்கரை நகராட்சி வார்டு எண்.1 முதல் 21 வார்டுகள் வரை 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை, அவர்களின் ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள்.23.07.2018–ல் குறிப்பிட்டுள்ள அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மாந 4) துறை நாள்.19.07.2018–ன்படியும் மற்றும் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மாந 4) துறை நாள்.26.07.2018–படியும் , உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள சொத்துவரி விதிப்புகளை, 01.04.2018 முதல் பின்வரும் வீதத்தில் சொத்துவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு பணிளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.

| வ.எண் | உபயோகம் | சொத்துவரி சீராய்வு செய்யும் விபரம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடஙகளுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு | 50 % சதவீதம் மிகாமல் |
| 2 | குடியிருப்பு அல்லாத கட்டிடஙகளுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு | 100% சதவீதம் மிகாமல் |
| 3 | வணிக உபயோக கட்டிடஙகளுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு | 100% சதவீதம் மிகாமல் |

அதன் பின்னர் வரப்பெற்றுள்ள் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மாந 4) துறை நாள்.26.07.2018–ன்படி, மேற்கண்ட உயர்வு சதவீதத்தில் திருத்தம் செய்து, பின்வரும் வீதத்தில் சொத்துவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்படுள்ளது.

| வ.எண் | உபயோகம் | சொத்துவரி சீராய்வு செய்யும் விபரம் |
|---|---|---|
| 1 | குடியிருப்பு கட்டிடஙகளுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு | 50 % சதவீதம் மிகாமல் |
| 2 | வணிக உபயோக கட்டிடஙகளுக்கான சொத்துவரி விதிப்புகளுக்கு | 100% சதவீதம் மிகாமல் |

மேற்கண்ட அரசாணைகள் தனி அலுவலர் அவர்களின் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. **<u>(கோப்பு எண். 825/2018/அ1)</u>**

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட அரசாணையின்படி சொத்துவரி பொதுதிருத்தம் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. சொத்துவரி பொதுதிருத்தம் தொடர்பான அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினஙகளுக்கும் அனுமதி அளிக்கலாம்.
4. சொத்துவரி தொடர்பான பொது அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்கான செலவினஙகளுக்கும் அனுமதி அளிக்கலாம்.
5. சொத்துவரி தொடர்பான படிவஙகளை இளம் நீல நிறம்,இளம் சிவப்பு நிறம் மற்றும் வெள்ளை நிறஙகளில் அச்சடிப்பதற்கும், அதற்கான செலவினஙகளுக்கும் அனுமதி அளிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.415</u>** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 2**

இந்நகராட்சியில் 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள்.23.07.2018 ல் குறிப்பிட்டுள்ள நகராட்சி நிர்வாகம்(ம) குடிநீர் வழஙகள் துறை(MA-IV) அரசாணை எண்.73 மற்றும் அராசாணை எண்.76 நாள்.26.07.2018 –ன்படி, சொத்துவரி பொது சீராய்வு செய்ய ஆரம்ப நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்களிடமிருந்து சொத்துவரி பற்றிய அறிக்கை தாக்கல் செய்யும் படிவம் மற்றும் சிறப்பு அறிவிப்பு நோட்டீஸ் அச்சடிக்கவும் மாஸ்ட்டர் லிஸ்ட் தயார் செய்யவும், சொத்துவரி சீராய்வு தொடர்பாக மேற்கொள்ளப்படும் அனைத்து செலவீனஙகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலைப்புள்ளி கோரவும் உத்தேச செலவீனம் ரூ.3,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.825/2018/அ1)**

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும் செலவீனஙகளை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.416** அனுமதிக்கப்பட்டது.

**பொருள் : 3**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் 8 இடஙகளில் உயர்மின் கோபுர விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்படி உயர்மின் கோபுர விளக்குகளில் பொருத்தப்பட்டுள்ள மின்விளக்குகள் பழுது ஏற்பட்டுள்ளது. மேலும், மின்விளக்குகளை இறக்கி ஏற்றும் இரும்பு கயிறு (ரோப்) தன்மை இழந்துள்ளதால், மேற்படி மின்விளக்குகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய இயலாத நிலையில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இல்லாமல் உள்ளது. ஆகவே, பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டஙகளில் அனைத்து வார்டுகளில் உள்ள தெருவிளக்குகளும் 100 சதவீதம் எரிய வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி புதிய பேருந்து நிலையம், சி.எஸ்.ஐ. சர்ச் அருகில், கிராம நிர்வாக அலுவலர் (VAO) அலுவலகம் அருகில், மீன்மார்க்கெட் பகுதியில், வடக்குத் தெரு கட்டாலிம்சா பஙகளா, மேலத்தெரு, கஸ்டம்ஸ் ஆபிஸ் அருகில் மற்றும் கிழக்குத் தெரு பள்ளிவாசல் ஆகிய இடஙகளில் உள்ள உயர்மின் கோபுர விளக்குகளை பழுது நீக்கம் செய்வதற்கு உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெற இந்நகராட்சிப் பொறியாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 770 /2018/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

1. இப்பணிகளின் அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ரூ.6,00,000/– செலவினஙகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.417** அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் : 4</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7616/2018/பி3 நாள்.06.06.2018–ன்படி நகராட்சி நிர்வாக ஆணையகரத்தில் 20.06.2018–ந் தேதி நடைபெற்ற 7வது மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணஙக, **Swatch Bharat mission- திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்யும் பொருட்டு** இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் இருந்து பிரித்து எடுக்கும் குப்பைகளை அந்தந்த வார்டு பகுதிகளிலே தரம் பிரித்து உரம் தயாரிக்கவும் இந்நகராட்சிக்குட்பட்ட உரக்கிடஙகில் உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுவதற்கும் இந்நகர் பகுதியில் வீடு வீடாகச் சென்று குப்பைகளை பிரித்து எடுக்கும் சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனம் மற்றும் டிப்பர் ஆட்டோ வாஙகும் பணிகள் தேர்வு செய்து ரூ.244 லட்சம் மதிப்பீட்டில் கண்டுள்ள பணிகளுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.393 நாள்.26.06.2018–ன்படி, நிர்வாக அனுமதி வழஙககோரி சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்ளுக்கு 26.06.2018–ந் தேதி விரிவான திட்ட கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்காணும், **Swatch Bharat mission– திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு** 13.08.2018–ந் தேதி நடைபெற்ற 7–வது மாநில உயர்மட்ட குழு நடவடிக்கையின் விபரம், சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22566/2018/பி3 நாள்.20.08.2018 வரப்பெற்றது.அதன் அடிப்படையில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.2 இந்துக்கள் மயானம் பகுதியில் நுண் உரம் செயலாக்க மையஙகள் அமைக்கும் பணி. (Construction of Micro Composted Centre) | **60.00** |
| | வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையஙகள் அமைக்கும் பணி. (Construction of Micro Composted Centre) | **60.00** |
| 2 | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனம் 9 எண்ணம் வாஙகுதல். (Purchase of Battery Operating Vehicle) | **16.20** |
| | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ 4 எண்ணம் வாஙகுதல். (Purchase of Four Wheeler Tipper Auto) | **22.40** |
| | **மொத்தம்** | **158.60** |

**(கோப்பு எண்.635/2018/இ1)**

<u>அலுவலகக்குறிப்பு</u>

இந்நகராட்சியில் **Swatch Bharat mission–திடக்கழிவு மேலாண்மை** மேற்கொள்ள பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதத்தினை பார்வையிட்டு பொறியாளர்களால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை மன்றம் அஙகீகரிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்.418**</u> அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி**